# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.வி.மு.ச. பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109720

1. District மாவட்டம்: திருவாரூர் PS காவல்நிலையம்: V&AC Year ஆண்டு: 2022 FIR No முதல் தகவல் அறிக்கை எண்: 8 Date நாள்: 18.11.2022

2. (i) Act சட்டம்: 120(B), 420, 409, 468, 471 IPC and Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: 13(2) r/w 13(1)(a) of prevention corruption Act 1988 Sections பிரிவுகள்: as amended 2018.
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல்: 1.4.2018 Date to நாள் வரை: 31.03.2019
Time Period நேர அளவு: Time from நேரம் முதல்: Time to நேரம் வரை:
(b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18.11.2022 Time நேரம்: 09.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 18.11.2022 Time நேரம்: 09.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக In the out come of preliminary enquiry.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் பிலிப்பூர் 30 KM West
Beat Number : முறைக் காவல் எண் b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த காநி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் B.V. நந்தகோபால் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் (g) Address : முகவரி Deputy Superintendent of police, Vigilance and Anti Corruption, Thiruvarur.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

8. Reasons for delay in reporting by the complainant / Informant குற்றமுறையிட்டவரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

**பணிந்தனுப்பப்படுகிறது :**

திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளராகிய நான் 18.11.2022ஆம் தேதி 09.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது கீழ்கண்ட எதிரிகள் மீது மேற்கொள்ளப்பட்ட முன் விசாரணை அறிக்கையை பெற்றும், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குனரின் உத்தரவுபடி இயக்குனரகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற நமூனா No. PE 48/2020/REV/TVR, Dt: 07.10.2022-ன் படியும் பதிவு செய்யப்பட்ட வழக்கின் விபரம் பின்வருமாறு.

**எதிரிகள் விபரம்:**

**A1-திருமதி.R.திவ்யா, கிராம நிர்வாக அலுவலர்,** ரிஷியூர் வருவாய் கிராமம், நீடாமங்கலம் தாலுக்கா, (தற்போது) மாறங்குடி வருவாய் கிராமம், கூத்தாநல்லூர் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்,

**A2-திரு.N.கண்ணன், எழுத்தர்,** தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், ZC4 ஒட்டக்குடி, நீடாமங்கலம் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்,

**A3-திரு.T.லோகநாதன், கிராம உதவியாளர்,** ரிஷியூர் வருவாய் கிராமம் (தற்போது) அனுமந்தபுரம் வருவாய் கிராமம், நீடாமங்கலம் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது

B.V. [signature] 18/11/22

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் B.V. நந்தகோபால்
Rank: நிலை DSP ...No. எண் .........
V&AC
திருவாரூர்.

எதிரி **A1-திருமதி.R.திவ்யா** என்பவர் ரிஷியூர் வருவாய் கிராமத்தின் கிராம **நிர்வாக அலுவலராக கடந்த 07.09.2017 முதல் 14.03.2019 வரையிலும்**, 19.03.2019 முதல் தற்போது வரை கூத்தாநல்லூர் தாலுக்கா, மாரங்குடி வருவாய் கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறார், எதிரி **A2-திரு.N.கண்ணன் என்பவர் ZC4 ஒட்டக்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் எழுத்தராக கடந்த 01.06.1999 முதல் தற்போது வரையிலும் (1.01.2019 முதல்** முதல் 31.05.2021 அயல் பணி, தொடக்க வேளாண்மை மற்றும் கிராம மேம்பாட்டு வங்கி, மன்னார்குடி) பணிபுரிந்து வருகிறார், எதிரி **A3-திரு.T.லோகநாதன் என்பவர் கடந்த 2017 முதல் 2019 பிப்ரவரி வரை** ரிஷியூர் வருவாய் கிராமத்தின் கிராம உதவியாளராகவும், தற்போது அனுமந்தபுரம் வருவாய் கிராமத்தின் கிராம உதவியாளராகவும் பணிபுரிந்து வருகிறார். எனவே எதிரிகள் 1 முதல் 3 வரையிலானவர்கள், ஊழல் தடுப்புச் சட்டம் 1988 as amended in 2018, சட்டப்பிரிவு 2(c)-இன் படி பொதுஊழியர்கள் ஆவார்கள்.

1) கடந்த 2018-19ஆம்ஆண்டு ஏற்பட்ட கஜா புயலின் காரணமாக விவசாயம் பாதிக்கப்பட்டதால் அரசு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு பயிர் காப்பீட்டு தொகை வழங்கியது. திருவாரூர் மாவட்டத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு கடந்த 2018-19 ஆம் ஆண்டுக்கு வேளாண் காப்பீட்டு நிறுவனத்திடம் இருந்து சம்பா (ரபி) நெல்லை பயிர் செய்த கடன் பெற்ற/கடன் பெறாத மொத்தம் 8,547 விவசாயிகளுக்கு ரூ.21,35,30,827/- யும் இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கியில் கொடுக்கப்பட்ட பட்டியலின் படி திருவாரூர் மாவட்டம் ஒட்டக்குடி வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்குட்பட்ட ரிஷியூர் கிராமத்திற்கு 116 கடன் பெற்ற விவசாயிகளுக்கு ரூ.12,44,071.05/- ருபாயும், கடன் பெறா விவசாயிகள் 187 நபர்களுக்கு ரூ.60,94,908.28/- ருபாயும் பயிர் காப்பீட்டு தொகை கடந்த 2018-19ஆம் ஆண்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.

2) விவசாயம் செய்பவர்கள் பயிர் காப்பீடு பதிவு செய்வதற்கு அவர்கள் விவசாயம் செய்யும் நிலத்தின் அளவு மற்றும் அதில் பயிர் செய்துள்ள விபரம் குறித்த அறிக்கை சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரிடம் கையொப்பம் மற்றும் அடங்கல் பெற்று அதனை பயிர் காப்பீடு செய்யும் போது சமர்பிக்க வேண்டும். இவ்வாறு சமர்பிக்கப்படும்

ஆவணங்களில் எவ்வளவு நில பரப்பு குறிக்கப்பட்டுள்ளதோ அதற்கு தகுந்தாற்போல் பயிர் காப்பீட்டு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும். விவசாயிகள் சிட்டா மற்றும் அடங்கல் கோரி கிராம நிர்வாக அலுவலரை அணுகும் போது கிராம கணக்குகளை கவனமுடன் பரிசீலித்து நிலத்தின் புல எண் மற்றும் அதன் பரப்பு குறித்து கைசிட்டா மற்றும் அடங்கல் விவரங்களை விவசாயிகளுக்கு எழுதி கையொப்பத்துடன் முத்திரையிட்டு வழங்க வேண்டும். அவ்வாறு பெற்று வந்து பயனாளிகள் கொடுக்கும் ஆவணங்களை கொண்டு கூட்டுறவு கடன் சங்கத்தில் விவசாயிகள் காப்பீட்டு தொகை பெற ஏதுவாக ஆன்லைனில் பதிவேற்றம் செய்து அதன் பின்னர் உரிய தொகை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மூலம் பெற்று வழங்கப்படும்.

3) **எதிரி-1 திருமதி.திவ்யா,** மேற்படி (2018-2019) காலக்கட்டத்தில் ரிஷியூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தபோது கிராம கணக்குகளில் போலியாக தனது பெயரிலும் தன்னுடைய உறவினர்கள் பெயர்களிலும், ரிஷியூர் கிராமத்தில் விவசாயம் செய்தது போன்று போலியாக பட்டா சிட்டா சான்று வழங்கியும், கிராம கணக்குகளை சரிவர பரிசீலிக்காமல் ஒரே புலஎண் மற்றும் அளவிற்குரிய நிலத்திற்கு இருவேறு நபர்கள் விவசாயம் செய்தது போன்று எதிரி-3 தயார் செய்து கொடுத்த பட்டா சிட்டாக்களில் சான்று வழங்கி முறைகேடாக அரசு பணத்தை பெற்று கையாடல் செய்து சுயலாபம் அடைந்துள்ளார். **எதிரி-3 திரு.லோகநாதன்** கிராம உதவியாளர், தனது பெயரிலும், ஒரே புலஎண் மற்றும் அளவிற்குரிய நிலத்திற்கு இருவேறு நபர்கள் விவசாயம் செய்தது போல் கிராம கணக்குகளை சரிவர பரிசீலிக்காமல் சான்றுகள் தயார் செய்து கொடுத்து, எதிரி-1க்கு உதவி புரிந்து முறைகேடாக அரசு பணத்தை பெற்று கையாடல் செய்து சுயலாபம் அடைந்துள்ளார். **எதிரி-2 திரு.கண்ணன்,** தனது பெயரிலும், தனது உறவினர்கள் பெயர்களிலும் எதிரி-1 மற்றும் 3-ன் மூலம் ரிஷியூர் கிராமத்தில் விவசாயம் செய்தது போன்று போலியாக பட்டா சிட்டா பெற்று இறந்த எதிரி திரு.மணி, **ZC4 ஒட்டக்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் செயலாளர் மூலம்** தவறான சான்றுகளை கொண்டு பதிவேற்றம் செய்து அரசு பணத்தை முறைகேடாக பெற்று சுயலாபம் அடைந்துள்ளார்.

. 4) எதிரி-1 முதல் 3 வரையிலானவர்கள் ஒன்றாக கூட்டு சேர்ந்து கடந்த 2018-19ஆம் ஆண்டில், ரிஷியூர் கிராமத்தில் பயிர் காப்பீட்டு திட்டத்தில், வேறு நபர்கள்

விவசாயம் செய்த நிலங்களை, தாங்களும், தங்களுடைய உறவினர்கள் மற்றும் தங்களுக்கு தெரிந்தவர்கள் விவசாயம் செய்தது போன்று போலியான ஆவணங்களை தயார் செய்தும் அதனை உண்மையான ஆவணங்கள் போன்று பாவித்து பயிர்காப்பீடு செய்து, முறைகேடாக விவசாயிகளுக்கு வழங்கிய காப்பீட்டு தொகையில் அரசு பணம் **ரூ.5,40,227/- பெற்று, கையாடல் செய்து சுயலாபம் அடைந்திருப்பது தெரியவருகிறது.**

5) மேலும் **எதிரி-1 திருமதி.திவ்யா,** ரிஷியூர் கிராம ஒரே புல எண்ணிற்கு உரிய பரப்பிற்கு இரண்டு மற்றும் மூன்று நபர்களுக்கு மீண்டும் மீண்டும் அடங்கல் சான்று கொடுத்து அதன் மூலம் அரசுக்கு ரூ.80,111/- இழப்பு ஏற்படுத்தியிருப்பதும் தெரியவருகிறது.

6) எனவே, மேலே குறிப்பிடப்பட்டுள்ள எதிரிகள் 1 முதல் 3 வரையிலானவர்களின் செய்கை நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்த வேண்டியது அவசியமாகிறது. எனவே மேலே கண்ட குற்ற அலுவலர் எதிரி-1 முதல் 3 வரையிலானவர்களின் செயல்கள் தொடர்பாக Prevention of Corruption Act 1988 as amended 2018, Sec 17(A)(1)-இன் படி எதிரி-1க்கு திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வருவாய் கோட்ட அலுவலர் அவர்களின் ந.க.எண். 2009/2020/அ1, நாள் 31.05.2020-ன் படியும், எதிரி-2க்கு திருவாரூர் மண்டலம், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அவர்களின் ந.க.எண்.1681/2020/தொ.வே.ச. நாள் 30.06.2022-ன் படியும், எதிரி-3க்கு திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டாட்சியர் அவர்களின் ந.க.1287/2022/ஈ4 நாள்:31.05.2022-ன் படியும் உரிய துறை அனுமதி பெற்றும், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குனர் அவர்களின் வழிகாட்டுதலின் படியும், திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 08/2022 சட்ட பிரிவுகள் 120(B), 420, 409, 468, 471 IPC மற்றும் 13(2) r/w 13(1)(a) of Prevention Corruption Act 1988 as amended in 2018 இன் படி இன்று 18.11.2022ஆம் தேதி 09.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசலினை, தலைமை நீதித்துறை நடுவர் திருவாரூர் அவர்களுக்கு அனுப்பியும், நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பில் வைக்கப்பட்டது.

18/11/22

துணை காவல் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
திருவாரூர்.

**திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 08/2022 சட்ட பிரிவுகள் 120(B), 420, 409, 468, 471 IPC மற்றும் 13(2) r/w 13(1)(a) of Prevention Corruption Act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் -7 –ன் விபரம்.**

**A1-திருமதி.R.திவ்யா, கிராம நிர்வாக அலுவலர்,** ரிஷியூர் வருவாய் கிராமம், நீடாமங்கலம் தாலுக்கா, (தற்போது) மாறங்குடி வருவாய் கிராமம், கூத்தாநல்லூர் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்,

**A2-திரு.N.கண்ணன், எழுத்தர்,** தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், ZC4 ஒட்டக்குடி, நீடாமங்கலம் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்,

**A3-திரு.T.லோகநாதன், கிராம உதவியாளர்,** ரிஷியூர் வருவாய் கிராமம் (தற்போது) அனுமந்தபுரம் வருவாய் கிராமம், நீடாமங்கலம் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.

துணை காவல் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
திருவாரூர்.